இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 3
இறுதிப் பரீட்சை 2007
அரசியலமைப்புச் சட்டம் 1 LWU 1201
காலம்: 03 மணித்தியாலம்

திகதி: 05.03.2007 நேரம்: மு.ப 10.00 – பி.ப 1.00 மணி வரை

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. இலங்கை அரசியலமைப்பு வரலாற்றை மதிப்பிடுகின்ற போது கோல்புருக் ஆணைக்குழு, மக்கலம் சீர் திருத்தங்கள், மனிங் அரசியலமைப்பு, டொனமூர் யாப்பு மற்றும் சோல்பரி யாப்பு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளை புறக்கணிக்க முடியாது. பின்னர் வரையப்பட்ட அரசியலமைப்புகளில் இவற்றினுடைய பங்களிப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

   இலங்கையின் 1972ஆம் ஆண்டு, 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு என்பவற்றுடன் தொடர்புறுத்தி மேலே தரப்பட்ட கூற்றை விமரிசித்து மதிப்பிடுக.

2. அரசியலமைப்பு சட்டம் தொடர்பான எந்தவொரு கற்கையும், அரசு மற்றும் அரசாங்கம் ஆகிய கருத்தேற்புக்களை கோடிட்டு காட்டும். ஒவ்வொரு முறைமையின் கீழும் அரசியலமைப்பு ஒன்றை திருத்துவதற்கு கையாளப்படும் நடபடிகளின் வேறுபாடு அத்தகைய அரசியலமைப்பை இறுக்கமானதாக அல்லது நெகிழ்ச்சியானதாக ஆக்கும்.

   ஆராய்க.

3. நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்குடன் 1978ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் விளைவுப்பயன்களை விமர்சித்து மதிப்பிடுக.

4. "அதிகாரமானது பகிர்ந்தளிக்கப்பட்டு அல்லது பகிரப்பட்டுள்ள போதே அதனை பயனுள்ள வகையில் பிரயோகிக்க முடியும்".

   ஐக்கிய ராச்சியம், ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கை என்பவற்றின் அனுபவங்களுடன் தொடர்புறுத்தி இக்கூற்றினை பகுப்பாய்வு செய்க.

5. "மக்களுடைய தேவைகளுக்கேற்ப ஒழுங்கமைக்கப்பட வேண்டிய ஒரு அரசினது அடிப்படை அமைப்பு அரசியலமைப்பு ஆகும். அரசியல் அமைப்பு ஒன்றை திருத்துதல் என்பது இலகுவான விடயம் ஒன்றல்ல. இலங்கை அமைப்பில் திருத்தும் நடபடியானது திருத்தத்தை தேவைப்படுத்துகின்ற உறுப்புரைக்கு அமைய மாற்றமடைகிறது. எவ்வாறாயினும் நியதிச்சட்டம் ஒன்றின் திருத்தம் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ இருக்கும்".

   கருத்துரைக்க.

6. சட்டவாட்சி என்ற புராதன கருத்தேற்பு பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் பல்வேறு வகையில் பொருள் கோடல் செய்யப்பட்டுள்ளது. எனினும் இக்கருத்தேற்பு இற்றைவரை இயைபானதாக தொடர்ந்திருக்கின்றது.

சட்டவாட்சியை மேலும் பயனுள்ள வகையில் ஆக்குவதற்கு சர்வதேச சட்ட வல்லுணர் மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை கருத்தில் கொண்டு மேலே தரப்பட்ட கூற்றை பகுப்பாய்வு செய்க.

7. "எமது தற்போதைய அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி அரசினது அனைத்து நிறுவனங்களிலும் மிக ஆழமாகவும் எங்கும் வியாபித்து உள்ள வகையிலும் செல்வாக்கு செலுத்துகின்றது".

மேற்தரப்பட்ட கூற்றின் சரியான தன்மையை பகுப்பாய்வு செய்க.

8. 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழான தேசிய அரசு பேரவை, 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பாராளுமன்றம் என்பவற்றினுடைய சட்டவாக் இறைமையை மதிப்பிடுக.

(பதிப்புரிமை பெற்றது)